6. அறிவிப்பு

உறுப்பினர்களின் வாகனங்களுக்கு புதிய வாகன அனுமதிச் சீட்டுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு* Hologram *பதிக்கப்பட்டு, புதிதாக வடிவமைக்கப்பட்ட வாகன அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படவுள்ளதால், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் தங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட வாகன அனுமதி சீட்டினை சட்டமன்ற பேரவைச் செயலகத்தில் திரும்ப ஒப்படைத்து, தாங்கள் பயன்படுத்தும் இரண்டு வாகனங்களுக்கு உரிய பதிவு எண்களை இச்செயலகத்திற்குத் தெரிவித்து புதிய வாகன அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம். ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள வாகன அனுமதிச் சீட்டுகள் 25–4–2012 முதல் செல்லாது என்றும், புதிய வாகன அனுமதிச் சீட்டுதான் இனி நடைமுறையில் இருக்கும் என்றும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வாகன சோதனை நிலையங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் இது தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அந்தக் கடிதத்தைக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) அந்த மாதிரி வாகனத்தில் ஒட்டிவிட்டதால், திரும்பக் கொடுக்க முடியவில்லை என்ற சூழ்நிலை இருந்தால், "அது கிழிந்து விட்டது, காணாமல் போய் விட்டது; எனினும் பின்னர் கண்டெடுக்கப்பட்டால் இந்தச் செயலகத்தின் வசம் ஒப்படைக்கிறேன், பழைய அடையாள அட்டையை வேறு யாரும் உபயோகிக்கவில்லை" என இந்த மூன்று பாயிண்ட்டுகளும் சேர்த்து கைப்பட எழுதிக் கொடுத்தீர்கள் என்றால், புதிய சீட்டு வழங்குவோம். (குறுக்கீடு) இது ஒரு நல்ல நோக்கத்தில் உங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இது* misuse *ஆகாது என்ற அடிப்படையில்தான்* Hologram fix *பண்ணிக் கொடுக்கிறோம். ஏற்கெனவே பத்திரிகையில் செய்தி வந்திருக்கும், நீங்கள் படித்திருப்பீர்கள். அதன் அடிப்படையில்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதனால் உறுப்பினர்கள் முழு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*